Enrich, X(II) : 1 - 6, Jan – June, 2019

# சங்ககால மக்கள் பயன்படுத்திய அடுகலப் புழங்கு பொருட்கள்

நீ.கந்தம்மாள், தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
பி.செல்வமேரி, முனைவர் பட்ட ஆய்வு மாணவி, தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

சங்ககால மக்களின் வாழ்வியல் அக்கால இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மக்களின் வாழ்வியல் கூறுகள் தட்பவெட்பம், அரசியல், பொருளாதாரம், மதம், மொழி, இனம் போன்ற காரணிகளால் பல நிலைகளில் மாறுபட்டு அமைகின்றன. இலக்கியப் படைப்பாளர்கள் அதனை இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றனர். அச்சமுதாய வாழ்வியலைக் கூற முற்படும் போது அம்மக்கள் பயன்படுத்திய புழங்கு பொருட்களும் இடம் பெறுகின்றன. அத்தகைய புழங்கு பொருட்களில் அடுக்களையில் பயன்படுத்திய பொருட்கள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**புழங்கு பொருட்கள் - விளக்கம்**

பழக்கம், வழக்கம் என்பது போன்ற சொல்லே புழக்கம். தமிழ் மொழியைப் பொருத்த வரையில் ‘நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்’ என்று தொல்காப்பியர் குறிப்பிடும் இரு வழக்குகளைக் காணமுடிகின்றது. அவ்வாறான ஓர் உலகியல் வழக்குச் சொல் தான் புழக்கம் என்பதாகும்.

மக்கள் வாழ்க்கையில் புழக்கத்தில் உள்ள பொருட்கள் ‘புழங்கு பொருட்கள்’ எனப்படுகின்றன. வீட்டிற்குள், வீட்டை விட்டு வெளியே பணியிடங்களில் மற்றும் பொது இடங்களில் புழக்கத்தில் உள்ள பொருட்களே புழங்கு பொருட்கள் எனப்படுகின்றன.

**அடுகலன்கள்**

வீட்டில் புழங்கக்கூடிய புழங்கு பொருட்கள் பல உள்ளன. பெரும்பாலான பொருட்கள் சமையல் மற்றும் உணவு சம்பந்தப்பட்டதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

‘அடுகலன்’ என்பது அடுக்களை அல்லது சமையலறையில் பயன்படுத்தும் கலன்களைக் குறிக்கிறது. கலன்கள் என்பது பெரும்பாலும் மண்ணாலும், உலோகங்களாலும் செய்யப்பட்டன. மண்ணால் கலன்கள் செய்வோரை ஐயூர் முடவனார்,

**கலம் செய் கோவே! கலம் செய் கோவே!** [1]

என்று புறநானூற்றில் குறிப்பிடுகிறார். தனிமகள் புலம்பிய முதுபாலைப்பாடலும்,

**கலம் செய் கோவே! கலம் செய் கோவே!** [2]

என்று அழைக்கிறது.

‘அடுகலம்’ என்னும் சொல்லைப் புறநானூற்றில் கோவூர்கிழார் பயன்படுத்தி உள்ளமையைக் காணமுடிகிறது. சோழன் நலங்கிள்ளியினது நாட்டின் சமையற்கலங்கள் எப்போதும் உணவினால் நிறைந்திருக்கும் என்பதைக்,

**"கடும்பின் அடுகலம் நிறையாக நெடுங்கொடி"[3]**

என்னும் பாடல் மூலம் கோவூர்கிழார் பாராட்டுகிறார்.

உணவினைச் சமைக்கும் இடமான சமையலறை 'அட்டில்' என்னும் பெயரில் அழைக்கப்பட்டது. அட்டில் என்பதற்கு "அடுதல் தொழில் செய்யும் இல்" என்று பெயர். அடுதல் என்பது "சமைத்தல்" என்பதைக் குறிக்கிறது. அடுப்பில் ஏற்றிச் சமைப்பது அடுதல். நீரிலிட்டு அவித்தல், அவித்து வேக வைத்து விடுதல், வறுத்தல், சுடுதல், வற்றலாக்குதல், வேகவைத்து ஊறவைத்தல் என்று பல வகைகளில் உணவு சமைத்தலின் நிலைகள் காணப்படுகிறன்றன.

**அடுப்பு**

சங்க கால மக்கள் உணவினைச் சமைப்பதற்கு அடுப்பாகக் கற்களைப் பயன்படுத்தியமையை இலக்கியங்களில் காணமுடிகிறது. அகநானூற்றில் உப்பினை விற்கச் சென்ற உப்பு வணிகர்கள், வண்டிகளில் பூட்டிய வலிமை பொருந்திய பிடரியினையுடைய எருதுகள் பலவற்றையும் பரந்து மேயும்படி அவிழ்த்து விட்டு, சமைத்து உண்டு, இளைப்பாறி அடுப்பினை அவ்விடத்தே விட்டுச் சென்றனர். பசுக்கூட்டம் பலவற்றைக் கவர்ந்து சென்ற வெட்சி வீரர்கள், உமணர் விட்டுச் சென்ற கல்லடுப்பில் ஊனைப் புழுக்கி உண்டு மகிழ்ந்த செய்தி,

**"தெண்கழி விளைந்த வெண்கல் உப்பின்**

**…………..**

**உமண் உயிர்த்து இறந்த ஒழிகல் அடுப்பின்"[4]**

என்னும் பாடல் மூலம் கூறப்பட்டுள்ளது.

**அட்டில்**

அடுக்களை அல்லது சமையலறை என்பது 'அட்டில்' எனும் பெயராலே அந்நாட்களில் அழைக்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் அகன்ற உணவுச் சாலைகள் இருந்தன என்பது,

**"அறம் நிலைஇய அகன் அட்டில்**
**சோறு வாக்கிய கொழுங் கஞ்சி"[5]**

எனும் பாடல் வரிகள் மூலமும், விருந்தினர்கள் திரண்டு குழுமியிருந்து, பின்னர் வீட்டினுள் சென்று, உணவு உண்டு, நீங்கிய பின்னரும் மிகுதியாகக் கிடக்கும் பெருஞ்சோற்றினை உடைய அடுக்களையைக் கொண்ட ஊர் காவிரிப்பூம்பட்டினம் என்னும் செய்தி,

**"விருந்துஉண்டு ஆனாப் பெருஞ்சோற்று அட்டில்"[6]**

என்னும் பாடல் வரி மூலமும் புலனாகின்றது.

சிறுபாணாற்றுப்படையில், புலவர் நல்லியக்கோடனிடம் சென்று பரிசில் பெறுவதற்கு முன் தனது வீட்டின் நிலைமை பற்றிச் சொல்லுங்கால்,

**"புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**காழ்சோர் முதுசுவர்க் கணிச்சிதல் அரித்த**
**பூழி பூத்த புழல்காளாம்பி"[7]**

என்கிறார். இதில் 'புல்லென் அட்டில் என்பது அடுக்களையின் கண் இருத்தற்கு உரிய அரிசி முதலிய பண்டங்களும், கருவிகளும் இன்றிப் பொலிவிழந்து கிடக்கும் அட்டில் என்பதைக்

குறிக்கும். அதில் அண்மையில் குட்டிகளை ஈன்ற நாய் தன் குட்டிகளுடன் படுத்திருந்தது. அடுக்களையில் இடையறாது தீ எரிந்தால் காளான் தோன்றாது. ஆனால், வெகுநாள் பயன்படுத்தாததினால் அச்சுவற்றில் கரையான்புற்று தோன்றி, அப்புழுதியில் காளான் பூத்தது. ஆதலின் 'அடுக்களை ஆம்பி பூத்தது'என்கிறார் புலவர்.

**மடா, துடுப்பு, தாலம்**

மடா, துடுப்பு, தாலம், மத்து முதலிய அடுகலன்கள் பண்டைத் தமிழர்களின் மனைகளில் இருந்தன. பாலைக் கௌதமனார், பல்யானைச் செல்கெழுகுட்டுவனின் மனையில் இருந்த இலையுடன் கூடிய சேம்பு போல் அகன்ற வாயினையுடைய சோறு சமைக்கும் பானையை (மடா),

**"அடைச் சேம்பு எழுந்த ஆடுறும் மடாவின்"**[8]

என்று உவமையுடன் வருணிக்கிறார்.

**"கொய்குரல் அரிசியொடு நெய்பெய்து அட்டு**
**துடுப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோறு"**[9]

என்னும் பாடலில் கொய்துவரப்பட்டக் கதிர்களிலிருந்து பெறப்பட்ட அரியோடு, நெய் ஊற்றித் துடுப்பினால் துழாவி சமைக்கப்பட்டக் களியாக வெந்த வெண்சோறு என்பதின் மூலம் சோற்றை ஆக்கப் பயன்படுத்தப்பட்டத் துடுப்பைப் பற்றிப் புறநானூறு எடுத்துரைக்கிறது.

வேள்பாரியின் மனையாள் தன்மனையில் நறுநெய்யிலே கடலையை வறுத்து, அதனோடு சோறும் சமைத்து உண்பிப்பதற்குத் தாலத்தைக் (பாத்திரத்தை) கழுவி வைத்தாள் என்பதை,

**"நறுநெய்க் கடலை விசைப்ப சோறு அட்டு**
**பெருந்தோள் தாலம் பூசல் மேவர"**[10]

என்று கபிலர் இப்பாடல் வழி விளக்குகிறார்.

**காழ், நாரரி (அ) சல்லடை**

ஊனைச் சுடுவதற்கு இரும்பு நாராசம் பயன்பட்டது. இதனைக் 'காழ்' என்று முடத்தாமக்கண்ணியார் பொருநராற்றுப்படையில் கூறுகிறார்.

**"காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை"**[11]

கள்ளை வடிகட்ட நாராலான அரியே பயன்படுத்தப்பட்டது. இது நாரரி, நெய்யரி, சல்லடை, பன்னாடை, அரியல் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டது என்பதற்கு இலக்கியங்களில் பல்வேறு சான்றுகள் உள்ளன.

**"வல்வாய்ச்சாடியின் வழைச்சுஅற விளைந்த**
**வெந்நீர் அரியல் விரல்அலை, நறும்பிழி"**[12]

எனக் குமட்டூர் கண்ணனாரும்,

**"நார்அரி நறவின் நாள்மகிழ் தூங்குந்து"**[13]

எனக் கோவூர் கிழாரும் பாடியுள்ளமையை அறியமுடிகிறது. பன்னாடையால் வடிகட்டிய கள் பற்றிக் கூறும் பாடல்கள் இக்கருத்தை மெய்ப்பிக்கின்றன.

**மத்து**

பழங்காலப் புழங்கு பொருட்களுள் மத்து, அம்மி போன்றவைகளும் இடம்பெறுகின்றன. தயிரினைக் கடைவதற்காக மத்தினைப் பயன்படுத்தினர்.

**"மத்துக் கயிறு ஆடா வைகற்பொழுது"**[14]

மத்தில் கயிற்றைச் சுற்றி அதன் முனைகளை இருகைகளால் பற்றி மாறி மாறி இழுத்துக்கடையும் போது அம்மத்தின் கயிறு ஆடுதலும் கடையாத காலத்து ஆடாமையும் உண்டாதலால் இங்குக் கடையாமையை உணர்த்த 'மத்து கயிறு ஆடா' என்றார் அரிசில் கிழார்.

**அம்மி**

நெடுநெல்வாடையில் குற்றேவல் புரியும் இளைஞர்கள் கருங்கொள்ளின் நிறத்தைக் கொண்ட சாந்து அரைக்கும் அம்மியில், கத்தூரி முதலிய மணப்பொருட்களைச் சேர்த்து அரைத்தனர் என்பதைக்,

**"கடியுடைய வியல்நகர்ச் சிறுகுறுந் தொழுவர்**

**கொள் உறழ் நறுங்கல் பல கூட்டு மறுக"**[15]

என்னும் பாடல் வழி விளக்குகிறார் நக்கீரனார். இதில் கொள் உறழ் நறுங்கல் என்பது அம்மியைக் குறிக்கிறது. இதன் மூலம் பொருட்களை அரைப்பதற்கு அம்மியைப் பயன்படுத்தியுள்ளமையை அறிய முடிகிறது.

உரல், உலக்கை, திரிகை, சுளகு முதலியன நாகரிகத்தின் சுவடுகள். கையினால் பற்றிக்கொள்ள ஒன்றும், அடிப்பகுதி ஒன்றுமாகக் கற்கருவிகள் இரு பொருள்களின் சேர்க்கையாக உரல் அமைகின்றது. உரலின் துணைக்கருவி உலக்கை.

உரல் சிறியது, பெரியது மட்டுமின்றி நிலத்தையும் தோண்டி நில உரலாகப் பயன்படுத்திய பண்பாடு புலப்படுகின்றது. சீறுரல் என்பது சிறிய உரலைக் குறித்தது.

**"…………..இரும்பிடி முழந்தாள் ஏய்க்கும்**

**துளைஅரைச் சீறுரல் தூங்கத் தூக்கி"**[16]

உரல் நடுவே துளை இருக்கும். அதின் நடுவிடத்தே துளைத்து கயிறிட்டுச் சகடத்தின் வாயிலிலே தொங்க விட்டிருந்தனர். உமணர்கள் இவ்வுரலைத் தங்கும் இடங்களில் நெல் முதலியன குத்துதற்கு உடன் கொண்டு சென்றனர் என்பதை இப்பாடல் விளக்குகிறது.

உரல் கற்கால நாகரிகத்தின் சுவடாக இருந்தாலும், தேவைக்கேற்ப நிலத்திலும் தோண்டி உரலாக்கினர். நிலத்தில் குழிக்கப்பட்ட உரல் 'நிலவுரல்' எனப்படும். எயினப் பெண்டிர் தாம் கொணர்ந்த புல்லரிசியை நிலவுரலில் பெய்து உலக்கையால் குற்றும் காட்சி,

**"நீழல் முன்றில் நிலஉரல் பெய்து**

**குறுங்காழ் உலக்கை ஓச்சி"**[17]

எனப் பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலவுரலில் குற்றுதற்குக் குற்றுலக்கையே ஏற்றதாகும் என்பதனால் 'குறுங்காழ் உலக்கை ஓச்சி' என்கிறார்.

உலக்கை, குற்றுலக்கை, இடிப்புலக்கை என இரு வகைப்படும். நெல், புல், கம்பு போன்ற தானியங்களின் மேற்தோலை நீக்கக் குற்றுலக்கையும், அரிசி, அவல் போன்ற தானியங்களை இடித்து மாவாக்க இரும்பினால் ஆன பூண் போடப்பட்ட உலக்கையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**“குரைத்தொடி மழுகிய உலக்கை வயின்தோறு”**[18]

தொடி - உலக்கையின் பூண் வருவார்க்கெல்லாம் நாடோறும் சோறு இடுதற்கு வேண்டிய நெல்லைக் குத்துதலின் உலக்கையின் தொடி மழுங்கியது எனப் பதிற்றுப்பத்தில் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடிய பாலைக் கௌதமனார் வியந்து கூறியுள்ளார்.

பெண்கள் பாடும் உலக்கைப் பாட்டிற்கு வள்ளைப்பாட்டு என்று பெயர். பூப்படைந்த பெண்ணிற்குக் காவலாக உலக்கையினை இடுவர். மசால் பொடிகள் இடிக்கும் சிறிய உலக்கைக்குக் ‘கழுந்து’ என்று பெயர். சுமங்கலிப் பெண்கள் உரலில் அமர்தல் கூடாது.

கணவனை இழந்த பெண்களுக்கு உரலைக் குப்புற கவிழ்த்து அதில் உட்கார வைத்து நீராட்டி மங்கல நாணினைக் கழற்றுவர். சில கிராமப்புறங்களில் இதனைப் பாரம்பரியமாகச் செய்து வருகின்றனர்.

**திரிகை**

தானியங்களைத் திரிப்பதற்குத் திரிகை பயன்படுத்தப்பட்டது. வரகினைத் திரிப்பதற்காகக் குதிர்கள் நிறைந்த முற்றத்தில் திரிகைமரம் பதிக்கப்பட்டிருந்த செய்தி,

**“பிடிக்கணத்து அன்ன குதிருடை முன்றில்**
**களிற்றுத் தாள் புரையும் திரிமரப் பந்தர்”**[19]

எனப் பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வட்டவடிவமாகப் பரந்து நிற்கும் திரிகைக்கு யானையின் கால் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**சுளகு**

புனைநாரால் செய்யப்படும் சுளகு தானியங்களைப் புடைப்பதற்கும், காய வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. இது முறம் என்னும் சொல்லாலும் குறிக்கப்படுகிறது.

**“நீறு ஆடுசுளகின் சீறிடம் நீக்கி**
**...............**
**மெழுகும் ஆப்பி கண் கலுழ் நீரானே”**[20]

என்னும் பாடலின் மூலம் சுளகு நாராலானது என்பதும் அதனைச் சாணத்தால் மெழுகினர் என்பதும் தெளிவாகிறது.

தானியங்களை உலர வைக்கச் சுளகினைப் பயன்படுத்தியமையை இலக்கியங்களில் காண முடிகிறது.

**“மேந்தோல் களைந்த தீம்கோள் வெள்ளள்**
**சுளகிடை உணங்கல் செவ்வி கொண்டு”**[21]

இதில் தோல் நீக்கப்பட்டப் பக்குவம் வாய்ந்த வெள்ளிய எள்ளானது முறத்தில் உலர வைத்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலக்கை மரத்தாலும், உரல் கல்லாலும், சுளகு மூங்கில் நாரினாலும் செய்யப்பட்டதையும் காணமுடிகிறது.

ஆனால் இவையும் இன்று அருகிவிட்டன. நெல்லை உரலில் இட்டுக் குற்றும் வழக்கம் முற்றிலும் மாறிவிட்டது. மின்சார அரவை ஆலைகளில் நெல்லை அரிசியாக்கி, அங்குத் தூய்மைப்படுத்தி, கல் நீக்கிப் பைகளில் அடைத்து விற்பனைக்கு வந்து விடுகிறது. எனவே சுளகைப் பயன்படுத்தும் வழக்கம் மாறிவிட்டது. சுளகு என்பது முன்பகுதி குறுகியும் பின்பகுதி வரவர அகன்றும் நீண்ட முக்கோண வடிவமுடையதாய் இருக்கும். முறம் என்பது அளவில் பெரியதாக இருக்கும். அதனை, யானையின் காதுகளுக்கு உவமையாகக் கூறப்பட்டச் செய்தி, குறிஞ்சிக்கலியில் இடம் பெற்றுள்ளது.

**“முறம் செவி வாரணம்”[22]**

**முடிவுரை**

சங்ககால மக்கள் பயன்படுத்திய பல அடுகலன்களின் பயன்பாடு இன்று மிகவும் அருகிவிட்டன. அடுப்பங்கரையில் பயன்படுத்தப்பட்டப் பாண்டங்கள் இன்று அலங்காரப் பொருள்களாக அரங்கில் அணிவகுத்து நிற்கின்றன.

**அடிக்குறிப்புகள்**

1 புறநானூறு, 228 – 1
2 மேலது,256– 1
3 புறநானூறு, 32 – 1
4 அகநானூறு, 159 : 1 – 4
5 பட்டினப்பாலை, 43 – 44
6 மேலது,262
7 சிறுபாணாற்றுப்படை, வரி : 132 – 134
8 பதிற்றுப்பத்து, 24 – 20
9 புறநானூறு, 328 : 10 – 11
10 புறநானூறு, 120 : 14 – 15
11 பொருநராற்றுப்படை, வரி : 105
12 பெரும்பாணாற்றுப்படை, வரிகள் : 280 – 281
13 புறநானூறு,400 – 2
14 பதிற்றுப்பத்து, 71 – 16
15 நெடுநெல்வாடை, அடிகள் 49 – 50
16 பெரும்பாணாற்றுப்படை, அடிகள் : 53 – 54
17 மேலது, அடிகள்: 96 – 97
18 பதிற்றுப்பத்து,24 – 19
19 பெரும்பாணாற்றுப்படை,அடிகள்– 186 - 187
20 புறநானூறு,249 : 12 – 14
21 மேலது, 321 : 2 – 3
22 கலித்தொகை, குறிஞ்சிக்கலி, 42 – 2